**உதவி அமர்வு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**உதவி அமர்வு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2023ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்.274/2022**
**இன்**
**அமர்வு வழக்கு எண்.207/2021**

மு. செல்வக்குமார் . . . மனுதார்/எதிரி

/எதிர்/

அரசுக்காக :
காவல் ஆய்வாளர் அவர்கள்,
சிவகிரி காவல்நிலையம் . . . எதிர்மனுதார்/
குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது கடந்த 24.01.2023ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. குமார் அவர்களும், எதிர்மனுதார் தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. S. கண்ணன் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், இரு தரப்பிலும் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உ த் த ர வு**

பிரதான வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்களை குறுக்கு விசாரணை

செய்வதற்கு ஏதுவாக மீண்டும் அழைக்க கு.வி.மு.ச., பிரிவு 311-ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

பிரதான வழக்கில் கடந்த 06.06.2022 அன்று அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 மகேஷ் மற்றும் கடந்த 05.07.2022 அன்று அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.2 குருசாமி, அ.சா.3 சம்பத், அ.சா.4 குருசாமி, அ.சா.5 சாந்தகுமார், அ.சா.6 அறிவழகன் ஆகியோர்கள் ஏற்கனவே முதல்விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஷை சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்ய வழக்கு பற்றிய சில விபரங்களும், சில ஆவணங்களும் கிடைக்கப் பெறாத காரணத்தால் எதிரி தரப்பில் ஷை சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், ஷை செயலானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், எனவே, பிரதான வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்களை மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக மீண்டும் அழைக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும், இல்லையெனில் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரின் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்த நாளிலேயே குறுக்கு விசாரணை செய்யப்படாமல், ஷை வழக்கை நாட்கடத்தி அ.சா.1 முதல் அ.சா.6ஐ அலைக்கழித்து, கஷ்ட நஷ்டம் ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வேண்டுமென்றே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் தற்போது பிழைப்பிற்காக வெளியூரில் தங்கி அன்றாட தினக்கூலியாக வேலை செய்து வருவதால், அங்கிருந்து

நீதிமன்றத்திற்கு சாட்சிமளிக்க வருவதற்கு பொருட்செலவு ஏற்படும் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

5. இரு தரப்பிலும் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. <u>**தீர்வு**</u>:

பிரதான வழக்கில் கடந்த 06.06.2022 அன்று அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 மகேஷ் மற்றும் கடந்த 05.07.2022 அன்று அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.2 குருசாமி, அ.சா.3 சம்பத், அ.சா.4 குருசாமி, அ.சா.5 சாந்தகுமார், அ.சா.6 அறிவழகன் ஆகியோர்கள் ஏற்கனவே முதல்விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஷை சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்ய வழக்கு பற்றிய சில விபரங்களும், சில ஆவணங்களும் கிடைக்கப் பெறாத காரணத்தால் எதிரி தரப்பில் ஷை சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், ஷை செயலானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், எனவே, பிரதான வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்களை மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக மீண்டும் அழைக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும், இல்லையெனில் மனுதாருக்கு பெருத்த

கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்த நாளிலேயே குறுக்கு விசாரணை செய்யப்படாமல், ஷை வழக்கை நாட்கடத்தி அ.சா.1 முதல் அ.சா.6ஐ அலைக்கழித்து, கஷ்ட நஷ்டம் ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வேண்டுமென்றே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் தற்போது பிழைப்பிற்காக வெளியூரில் தங்கி அன்றாட தினக்கூலியாக வேலை செய்து வருவதால், அங்கிருந்து நீதிமன்றத்திற்கு சாட்சிமளிக்க வருவதற்கு பொருட்செலவு ஏற்படும் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எதிர்மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

8. வழக்குக் கோப்புகளை ஆராய்கையில், வழக்கானது அரசு தரப்பில் அ.சா.9 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மீதியுள்ள சாட்சிகளின் சாட்சியங்களுக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

9. மனுதாரர் தனது மனுவில், அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் ஏற்கனவே முதல்விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஷை சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய சில ஆவணங்களை பரிசீலனை செய்து திறம்பட குறுக்கு விசாரணை செய்யவேண்டியிருந்ததால் அன்றைய தினத்தில் ஷை சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், தற்போது நீதிமன்றம் உத்தரவிடும் நாளில் குறுக்கு விசாரணை செய்ய மனுதார் தயாராக உள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், எதிர்மனுதார் தரப்பில் வழக்கினை காலங்கடத்தும் நோக்கிலும், அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகளை அலைக்கழிக்கவேண்டுமென்ற எண்ணத்திலும்தான் மனுதாரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*10*. மேலும், அசல் வழக்கு கோப்பினை ஆராய்கையில், கடந்த 06.06.2022 அன்று அரசு தரப்பில் சாட்சி மகேஷ் அ.சா.*1* ஆகவும், கடந்த 05.07.2022 அன்று சாட்சிகள் குருசாமி, சம்பத், குருசாமி, சாந்தகுமார் மற்றும் அறிவழகன் ஆகியோர்கள் முறையே அ.சா.*2* முதல் அ.சா.*6* வரை ஏற்கனவே முதல்விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில், தற்போது, அ.சா.*1* முதல் அ.சா.*6* சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்காக இம்மனு கு.வி.மு.ச., *311* பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், அரசு தரப்பில் மனுதார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக மனுதார் தன் தரப்பு நிலைப்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு ஒரு வாய்ப்பு வழங்குவதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

*11*. ஆனால், எதிர்மனுதார் தரப்பில், வழக்கினை காலங்கடத்தும் நோக்கிலும், அ.சா.*1* முதல் அ.சா.*6* சாட்சிகளை அலைக்கழிக்கவேண்டுமென்ற எண்ணத்திலும்தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.*1* முதல் அ.சா.*6* சாட்சிகள் பிழைப்பிற்காக வெளியூருக்கு சென்று, அங்கு தினக்கூலியாக வேலை செய்து வருகிறார்கள் என்றும், அவர்கள் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரவேண்டுமென்றால் பெரும் பொருட்செலவு ஏற்படும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மாண்பமை உச்சநீதிமன்றம், ***State Of U.P. /vs/ Shambhu Nath Singh And Ors, dated 29 March, 2001, reported in 2001 (4) SCC 667*** என்ற முன்வழித் தீர்ப்பினை இந்நீதிமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், மேற்படி முன்வழித் தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> *We make it abundantly clear that if a witness is present in court he must be examined on that day. The court must know that most of the witnesses could attend the court only at heavy cost to them, after*

*keeping aside their own avocation. Certainly they incur suffering and loss of income. The meagre amount of Bhatta (allowance) which a witness may be paid by the court is generally a poor solace for the financial loss incurred by him. It is a sad plight in the trial courts that witnesses who are called through summons or other processes stand at the doorstep from morning till evening only to be told at the end of the day that the case is adjourned to another day. This primitive practice must be reformed by presiding officers of the trial courts and it can be reformed by every one provided the presiding officer concerned has a commitment to duty. No sadistic pleasure in seeing how other persons summoned by him as witnesses are stranded on account of the dimension of his judicial powers can be a persuading factor for granting such adjournments lavishly, that too in a casual manner.*

எனவே, மேற்சொன்ன முன்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மைகளை கருத்திற்கொண்டும், அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் பிழைப்பிற்காக வெளியூர்களில் தினக்கூலியாக வேலை செய்து வருகிற நிலையில், அவர்களை மீண்டும் குறுக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கும்பட்சம் பெரும் பொருட்செலவு ஏற்படும் என்ற எதிர்மனுதார் தரப்பு வாதத்தை கருத்திற்கொண்டும், தகுந்த செலவுத்தொகையை மனுதார் வழங்கும்பட்சம் இம்மனுவை நிபந்தணையின்பேரில் அனுமதிக்கலாம் என முடிவு செய்வதுதான் நீதியின்பாற் சிறந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. இறுதியாக, மனுதார் மனுவின் செலவுத்தொகையாக அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்களுக்கு தலா ரூ.2,500/-ஐ இந்நீதிமன்றத்தில் வருகிற 20.02.2023 தேதிக்குள் செலுத்தும்பட்சம் இம்மனு அனுமதிக்கப்படும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகி நிற்கும். மீண்டும் அழைக்க 21.02.2023.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2023ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2023.02.07 18:42:39 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>மனுதார் தரப்பு சாட்சிகள்</u>: இல்லை

<u>மனுதார் தரப்பு சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள்</u>: இல்லை

<u>எதிர்மனுதார் தரப்பு சான்றாவணங்கள்</u>: இல்லை

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2023.02.07 18:42:46 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**உதவி அமர்வு நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்**

**குற்றவியல் பல்வகை மனு**
**எண்.274/2022**
**இன்**
**அமர்வு வழக்கு எண்.207/2021**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள்: 07.02.2023**